# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 097/மா/2018

ஆணை எண். 119/2018

நாள் : 10/05/2018

திரு L சேது,
தஞ்சாவூர். – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர். – எதிர் மனுதாரர்

தஞ்சாவூர், எண்.பி–5, டேனியல் தாமஸ் நகர் முகவரியில் வசிக்கும் திரு L. சேது அவர்களின் 01.05.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 097/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் அவர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தஞ்சாவூர், எண்.பி–5, டேனியல் தாமஸ் நகர் முகவரியில் வசிக்கும் திரு L. சேது என்பவர், தஞ்சாவூர் மாநகராட்சி, வார்டு எண்.41, டேனியல் தாமஸ் நகர் பகுதி சாலைகள் பழுதடைந்துள்ளதைக் குறிப்பிட்டு, அச்சாலைகளை சீரமைக்கக் கோரி மாநகராட்சி ஆணையருக்கு மின்னஞ்சல் மூலம் 03.10.2017 அன்று தெரிவித்ததுடன், அலைபேசி வாயிலாகவும், ஆணையர் மற்றும் செயற்பொறியாளருக்கு தனது கோரிக்கையினைத் தெரிவித்துள்ளார். தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் அலுவலக 23.03.2018 நாளிட்ட கடிதத்தில் , சீரமைக்கக் கோரியுள்ள சாலைப் பணியினை 2017–18–ஆம் ஆண்டு TURIP திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணியினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. திட்டப் பணியினை மேற்கொள்ள ஒப்பந்ததாரருடன் ஒப்பந்தம் நிறைவு செய்த பின், ஒப்பந்தப்பணிக்கான ஆணை வழங்கப்படும் என அறிய நேரிடுகிறது. ஒரு திட்டப்பணியினை மேற்கொள்ள சில நடைமுறைகளைப் பின்பற்றிய பின்பே பணிக்கான ஆணை அலுவலர்களால் வழங்க இயலும். எனவே, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி தஞ்சாவூர் மாநகராட்சி, வார்டு

எண்.41, டேனியர் தாமஸ் நகர் பகுதி சாலைகளை சீரமைக்க உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளுமாறு மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மே திங்கள், 10–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

2. திரு L. சேது,
எண்.க்ஷ–5, டேனியல்,
தாமஸ் நகர்,
தஞ்சாவூர் – 613 007.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்